The Hindu (English)

Dated: 25.11.2024

# Consultation meet on electoral rolls held

**The Hindu Bureau**
CHENNAI

A consultation meeting on field-level verification and updates for the Special Summary Revision-2025 of electoral rolls in Chennai district was held at the Ripon Buildings on Sunday.

According to a press release, Chennai District Electoral Roll Observer Anil Meshram chaired the session, which addressed the inclusion, deletion, and correction of names in the electoral rolls for the district's 16 Assembly constituencies.

### Voter participation

Mr. Meshram said awareness campaigns were essential at colleges and public spaces to increase voter participation and encourage first-time voters.

He instructed booth-level officers and supervisors to conduct "thorough field verification" of applications and cross-check name deletions, address changes, and duplicate corrections.

Special Summary Revision (SSR) is an annual process, conducted as per instructions of the Election Commission, to update the electoral rolls.

At the meeting, Mr. Meshram, along with representatives of recognised political parties, electoral registration officers, and senior election officials, reviewed ongoing efforts related to the electoral rolls.

### Special camp

Later in the day, Mr. Meshram inspected a special camp for electoral roll revision at Loyola College.

Additional District Election Officer M. Prithiviraj, along with senior election officials and party representatives, were also present.

Deccan Chronicle
Dated: 25-11-2024

# Meeting held to update electoral roll

DC CORRESPONDENT,
CHENNAI, NOV. 24

A meeting for updating the voter lists in 16 Assembly constituencies in the city was held at Rippon building on Sunday. It was chaired by Anil Mesram, electoral roll observe as part of a Special Summary Revision of Electoral Roll 2025.

During the meeting which was held in the presence of representatives of political parties, the officials were asked to complete addition and omission of voters with due diligence.

"All individuals who cross 18 should apply to add their names in the voters list. Deletion of names should be carried out with proper checking through the local officials. If anybody has a complaint, the local officials can be approached," the observer said.

The Hind
Dated: 2

சென்னை மாவட்ட

# முறையாக பணிபுரியாத வாக்

## வாக்காளர் பட்டிய

சென்னை

முறையாக பணிபுரியாத வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை நீக்க வேண்டும் என்று சென்னை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அனில் மேஷ்ராம அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், வாக்குப் பதிவு அலுவலர்கள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் கலந்துகொண்ட ஆலோசனை கூட்டம் சென்னை ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அனில் மேஷ்ராம் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகள் விவரம்:

தொகுதி வாரியாக வழங்கப்படும் வாக்காளர்கள் பட்டியலை பூத் வாரியாக வழங்க வேண்டும். வாக்காளர் முகவரி மாறிய நிலையில், அவர்களுக்கு 2 இடங்களிலும் வாக்குகள் இருப்பதாக குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்படுகிறது. அந்த கடிதத்தை பெற்று என்ன செய்ய வேண்டும் என அவர்களுக்கு தெரிவதில்லை. எனவே, இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் பணிகள் திருப்

திகரம
போதி
பாலும்
இருக்
குற
சேர்ந்த
களில்
காளர்
ஆன
யும்
நிலுவ
இதற்
உயிர்
உரிய
மேற்
இ
தனர்.
இ
காளர்

The Hindu (Tamil)
Dated: 25.11.2024

# இந்திய வாக்கு எண்ணிக்கை முறை எலான் மஸ்க் பாராட்டு

புதுடெல்லி

‘இந்தியா 64 கோடி வாக்குகளை ஒரே நாளில் எண்ணி முடித்தது எப்படி’ என்ற ஒரு ஊடக செய்தித் தலைப்பின் ஸ்க்ரீன்ஷாட்டை ஒருவர் எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதை நேற்று டேக் செய்துள்ள டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க், “இந்தியா 64 கோடி வாக்குகளை ஒரே நாளில் எண்ணி முடித்தது. கலிபோர்னியாவில் வாக்கு எண்ணிக்கை இன்னும் தொடர்கிறது” என பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் கடந்த 5-ம் தேதி நடைபெற்றது. பெரும்பாலான மாகாணங்களில் தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டன. ஆனாலும் அதிக மக்கள் தொகை கொண்ட கலிபோர்னியாவில் இன்னும் வாக்கு எண்ணிக்கை முடியவில்லை. தேர்தல் முடிந்து 20 நாட்கள் முடிந்த நிலையிலும் இன்னும் அங்கு தேர்தல் முடிவு வெளியாகவில்லை என்பதைத்தான் எலான் மஸ்க் சுட்டிக்காட்டி உள்ளார்.

கலிபோர்னியா உள்ளிட்ட சில மாகாணங்களில் எப்போதுமே வாக்கு எண்ணிக்கை பல வாரங்களுக்கு நீடிக்கும். கலிபோர்னியாவை பொருத்தவரை பெரும்பாலானவர்கள் அஞ்சல் மூலம் வாக்குகளை செலுத்துவார்கள். இத்தகைய வாக்குகளை எண்ணுவதற்கு உறையின் மீது உள்ள கையெழுத்து சரிபார்த்தல் உட்பட பல்வேறு நடைமுறைகள் உள்ளன.

மேலும் இந்தியாவைப் போல மத்திய தேர்தல் ஆணையம் அமெரிக்காவில் இல்லை. அந்தந்த மாகாணங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் அலுவலகங்கள்தான் தேர்தல் பணிகளை கவனிக்கும். அதேநேரம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனி தேர்தல் விதிமுறைகள் உள்ளன. இதுவே தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

Dinamalar
Dated: 25.11.2024

# இந்திய தேர்தல் நடைமுறை எலான் மஸ்க் திடீர் பாராட்டு

வாஷிங்டன், நவ. 25–

இந்தியாவில் ஓட்டு எண்ணும் நடைமுறையை பாராட்டிய உலகப் பணக்காரர்களில் ஒருவரான தொழிலதிபர் எலான் மஸ்க், அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஓட்டுகள் எண்ணப்படுவதில் நிலவும் தாமதத்தை விமர்சித்தார்.

அமெரிக்காவில், கடந்த 5ல் நடந்த அதிபர் தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவில் தேர்தலுக்கு ஓட்டுச்சீட்டு முறை பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், மிகப் பெரிய மாகாணமான கலிபோர்னியாவில், ஓட்டு எண்ணிக்கை துவங்கி, 20 நாட்களாகியும் இன்னும் அந்தப் பணி முடிவடையவில்லை.

அந்நாட்டு தேர்தல் கமிஷனின் புள்ளி விபரப்படி, 3,00,000 ஓட்டுகள் எண்ணப்படாமல் உள்ளன. ஓட்டுச் சீட்டுகளில் வாக்காளர்களின் கையெழுத்து சரிபார்ப்பு, வரிசைப்படுத்துவது போன்றவற்றால், ஓட்டு எண்ணிக்கை தாமதமாவதாகக் கூறப்படுகிறது.

நம் நாட்டில் கடந்த ஏப்., – மே மாதங்களில் நடந்த லோக்சபா தேர்தலில், 64 கோடி ஓட்டுகள் பதிவாகின. இவை, ஒரே நாளில் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. நம் நாட்டில் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், ‘இந்தியா ஒரு நாளில் 64 கோடி ஓட்டுகளை எப்படி எண்ணியது’ என்ற தலைப்பில் ஊடகத்தில் வெளியான செய்தியை சமூக வலைதளத்தில் பகிர்ந்து, எலான் மஸ்க் வெளியிட்ட பதிவில், ‘இந்தியாவில், ஒரே நாளில், 64 கோடி ஓட்டுகள் எண்ணப்படுகின்றன.

‘ஆனால் கலிபோர்னியாவில் இன்னும் ஓட்டுகள் எண்ணப் பட்டு வருகின்றன’ என விமர்சித்தார்.

Daily Thanthi, Date: 25-11-2024



சென்னை கொளத்தூரில் உள்ள ஒரு வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நடந்தபோது எடுத்த படம்.

# வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நிறைவு

## ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

சென்னை, நவ.25-

4 நாட்கள் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நிறைவடைந்தது. ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

### சிறப்பு முகாம்

வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கு வசதியாக கடந்த 16, 17 ஆகிய தேதிகளில் முதல் கட்ட சிறப்பு முகாம் நடந்தது. தொடர்ந்து 2-வது கட்ட சிறப்பு முகாம் நேற்று நடைபெற்று முடிந்தது.

முதல் கட்ட சிறப்பு முகாமில், புதிய வாக்காளர் பதிவுக்கு 31 ஆயிரத்து 279 விண்ணப்பங்கள், பெயர் சேர்த்தல், நீக்கல், ஆட்சேபனை தெரிவித்தல் தொடர்பாக 657 விண்ணப்பங்கள், முகவரி மாற்றம், மாற்று வாக்காளர் அடையாள அட்டை, திருத்தம் தொடர்பாக 14 ஆயிரத்து 231 விண்ணப்பங்கள் என மொத்தம் 46 ஆயிரத்து 167 விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டன. 2-ம் கட்டமாக நேற்று முன்தினம் நடந்த சிறப்பு முகாமில் 15 ஆயிரத்து 782 விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டுள்ளது. மொத்தம் 61 ஆயிரத்து 949 விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

### பொதுமக்கள் புகார்

இந்த நிலையில், நேற்று 4-வது நாளாக வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடந்தது.

செங்குன்றம் அருகே உள்ள விளாங்காடுபாக்கத்தில் நடந்த முகாமில் முகவரி மாற்றம் செய்வதற்கு சென்றவர்களுக்கு முறையான படிவம் இல்லாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். இதுகுறித்து, அதிகாரிகளிடம் கேட்டபோது, எங்களுக்கு விண்ணப்ப படிவம் உயரதிகாரிகள் வழங்காததால் கொடுக்கமுடியவில்லை என்று தெரிவித்தனர்.

இதனால் பலர் முகவரி மாற்றம் செய்ய முடியாமல் திரும்பசென்றனர். சிலர் அருகில் உள்ள மற்றொரு முகாமுக்கு சென்று முகவரி மாற்றம் படிவம் இரவலாக பெற்று நிரப்பி தங்கள் முகாமில் கொடுத்தனர். ஒரு சில இடங்களில் அதிகாரிகள் இல்லாமல் இருந்ததாகவும், இருந்த அதிகாரிகளும் வாக்காளர்களுக்கு முறையாக பதில் அளிக்கவில்லை எனவும் பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

### வாக்குவாதம்

இதேபோல, வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறும் பகுதிகள் அருகில் அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் பிரதிநிதிகள் மேஜை அமைத்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது சில பகுதிகளில் சில கட்சியினருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதையும் பார்க்கமுடிந்தது.

இதனால் 4 நாட்களாக வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் பரபரப்பாகவே நடைபெற்று முடிந்தது. வாக்காளர்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனைகள் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 6-ந்தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

## தி.மு.க., த.வெ.க நிர்வாகிகள் மோதல்

சென்னை அயோத்திக்குப்பம் லேடி வில்லிங்டன் பள்ளி பகுதியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தம் சிறப்பு முகாமில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மேஜை அமைக்கப்பட்டு, கட்சி கொடியுடன் நிர்வாகிகள் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கிருந்த தி.மு.க.வினர் அந்தபகுதியில் மேஜை அமைக்கக்கூடாது எனவும், அதை அகற்றுமாறும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இதனால் இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதையறிந்து அங்கு வந்த மெரினா போலீசார் அவர்களை சமாதானப்படுத்தினர். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

Daily Thanthi
Dated: 25.11.2024

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில்

# அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஆலோசனை

சென்னை, நவ.25-

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அனில் மேஸ்ரம் ஆலோசனை நடத்தினார்.

## சிறப்பு சுருக்கமுறை திருத்தம்

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் நேற்று சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான 2025-ம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அனில் மேஸ்ரம் தலைமை தாங்கினார். வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதில் தி.மு.க. சார்பில் சட்டத்துறை மாநில துணை செயலாளர்கள் சந்துரு, மருதுகணேஷ், அ.தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ. சத்யா, ராஜேஷ், பா.ஜனதா சார்பில் மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வக்கீல் பிரிவு மாநில பொதுச்செயலாளர் ஹேமச்சந்திரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் கருணாநிதி, தே.மு.தி.க. சார்பில் மாநில வக்கீல் பிரிவு துணை செயலாளர் சந்தோஷ் குமார், மாவட்ட செயலாளர் எஸ்.கே.மாறன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வெவ்வேறு வாக்குச்சாவடி

கூட்டத்தில், சென்னை மாவட்ட வாக்காளர் பார்வையாளர் அனில் மேஸ்ரமிடம், அரசியல் கட்சி பிரதிநிதிகள் பல்வேறு புகார்களை தெரிவித்தனர்.

கடந்த முறை நடைபெற்ற வாக்காளர் சரிபார்ப்பு கூட்டத்திலும், இந்த கூட்டத்திலும் மாநகராட்சி கமிஷனர் குமரகுருபரன் கலந்துகொள்ளவில்லை எனவும், முன்கூட்டியே எந்த தகவலும் தெரிவிக்கவில்லை எனவும் பா.ஜனதா மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் புகார் தெரிவித்தார்.

மேலும் இறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாமல் உள்ளதாகவும், வாக்குரிமை உள்ளவர்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு உள்ளதாகவும் கட்சி பிரதிநிதிகள் புகார் தெரிவித்தனர்.

இதேபோல, பல்வேறு அரசியல் கட்சியினரும், கடந்த 16,17 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் முகாமில் வாக்காளர்களின் விவரங்கள் வாக்குச்சாவடி இல்லை. ஒரே பகுதியில் உள்ளவர்கள் வெவ்வேறு வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்கும் நிலை உள்ளதாகவும், அதை சரிசெய்ய வேண்டும் எனவும் கூறினர்.

Dinamalar
Date: 25-11-2024

# வாக்காளர் சிறப்பு முகாம்களில் 14 லட்சம் விண்ணப்பங்கள்

**சென்னை, நவ. 25–**

நான்கு நாட்கள் நடந்த வாக்காளர் சிறப்பு முகாம்களில், 14 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி, வரும் 28ம் தேதி வரை நடைபெற உள்ளது. கடந்த 17, 18ம் தேதிகளிலும், 23, 24ம் தேதிகளிலும், அனைத்து ஓட்டுச்சாவடிகளிலும் வாக்காளர் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

**குழப்பம்**

சிறப்பு முகாமில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நேற்றைய முகாமில், சில இடங்களில் முகவரி மாற்றம் தொடர்பாக விண்ணப்பம் பெறுவதில் குழப்பம் ஏற்பட்டது.

ஏற்கனவே ஓட்டளித்த ஓட்டுச்சாவடிக்கு சென்ற போது, புதிய முகவரியில் உள்ள ஓட்டுச்சாவடியில் விண்ணப்பம் அளிக்கும்படி கூறினர்.

அங்கு சென்றால், ஏற்கனவே இருந்த ஓட்டுச்சாவடியில் விண்ணப்பம் அளியுங்கள் என அங்கிருந்தவர்கள் கூற, விண்ணப்பதாரர்கள் குழப்பம் அடைந்தனர்.

நேற்று கடைசி முகாம் என்பதால், அனைத்து ஓட்டுச்சாவடிகளிலும், கூட்டம் அதிகம் இருந்தது. கடந்த 17, 18ம் தேதி நடந்த முகாம்களில் மொத்தம், 6 லட்சத்து, 85,513 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

**கள ஆய்வு**

இவற்றில், 4 லட்சத்து, 42,035 விண்ணப்பங்கள் பெயர் சேர்ப்பதற்காக வந்துள்ளன. கடந்த இரண்டு நாட்களாக நடந்த முகாமில், 7 லட்சத்து, 15,102 விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன.

நான்கு நாட்கள் நடந்த சிறப்பு முகாம்களில் மொத்தம், 14 லட்சத்து, 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்கள் மீது கள ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன்பின் தகுதியான நபர்களின் பெயர்கள், வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். நீக்க வேண்டியவர்கள் பெயர் நீக்கப்படும். முகவரி மாற்றம், திருத்தம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும் என, தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முகாமில் விண்ணப்பம் கொடுக்க முடியாதவர்கள், **https://voters.eci.gov.in** என்ற இணையதளத்திலும், 'VOTER HELP LINE' மொபைல் ஆப் வழியாகவும் விண்ணப்பிக்கலாம்.

## த.வெ.க., ஆர்வம்

வாக்காளர் சிறப்பு முகாம் நடந்த ஓட்டுச் சாவடிகளில், அரசியல் கட்சியினர் முகாமிட்டு, வாக்காளர்கள் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற உதவிகள் செய்தனர்.

தி.மு.க., – அ.தி.மு.க., – பா.ஜ., உள்ளிட்ட கட்சிகளை போல், புதிதாக உருவாகி உள்ள, தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்தவர்களும், ஓட்டுச்சாவடிகள் அருகே முகாமிட்டு, வாக்காளர்களுக்கு உதவிகள் செய்தனர்.